இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
இடைநிலை, மூன்றாம்நிலை கல்வித் துறை
கல்விப்பீடம்
முதுகல்விமாணி நிகழ்ச்சித்திட்டம்
இறுதிப்பரீட்சை - **2018/2019**
**ESP2313/ STP9813 –** கல்வியில் ஆய்வு முறைகள்
காலம்: 03 மணித்தியாலங்கள்

---

நேரம் : மு.ப 09.30 – நண்பகல் 12.30 திகதி : 23.03.2019

---

- முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றில் இருந்து மூன்று (03) வினாவிற்கும் விடை எழுதுக.
- ஒரு வினாவிற்கு ஒரு ஆய்வுப் பிரச்சினை மட்டுமே பயன்படுத்த முடியும்.
- முதலாம் வினாவுக்குரிய விடையினை இவ்விடைத்தாளிலேயே எழுதுக.

01. கல்விக்கான தேசிய ஆராய்ச்சி சபையானது கல்வி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுபவர்களுக்கு மானிய உதவியை வழங்குவதற்கான பின்வரும் கருப்பொருட்களில் ஆய்வுப் பிரச்சினைகளை கோரியிருப்பதாக எண்ணிக் கொள்க. இம்மானிய உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக உமது நிறுவனத்தலைவர் ஓர் ஆய்வுப் பிரச்சினையைத் தயாரிக்க உங்களை வேண்டிக் கொண்டுள்ளார் எனவும் கருதுக.

- தரம் 10-11 களில் கணித பாடத்தில் மாணவர்களின் அடைவு மட்டம்
- கற்றல்-கற்பித்தலில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
- பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மைசார் விருத்தி
- உயர்தர வகுப்புக்களில் மாணவர்களின் குறைவான வரவு
- மாணவர் நலனோம்பலும் அவர்களது கற்றலும்

(i) மேலே தரப்பட்டுள்ள கருப்பொருட்களில் ஒன்றைத் தெரிவுசெய்து, கருப்பொருளுடன் தொடர்புபட்ட வகையில் குறிப்பான ஆய்வுப் பிரச்சினை ஒன்றை உருவாக்குக?

(அ).கருப்பொருள்..........................................................................................
..........................................................................................................

(ஆ).ஆய்வுப் பிரச்சினை

..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

(10 புள்ளிகள்)

(ii) மேலே தெரிவுசெய்த ஆய்வுப் பிரச்சினையை ஆய்வுக்குட்படுத்தவேண்டியதன் முக்கியத்துவத்தை நியாயிப்பதற்கு நான்கு (04) காரணங்களைக் குறிப்பிடுக?

அ....................................................................................................

....................................................................................................

ஆ....................................................................................................

....................................................................................................

இ....................................................................................................

....................................................................................................

ஈ....................................................................................................

....................................................................................................

(04 புள்ளிகள்)

(iii) நீங்கள் மேலே கூறியுள்ள ஆய்வுப் பிரச்சினையை ஆய்வு செய்வதற்காக பொருத்தமான ஆய்வு வடிவத்தைக் குறிப்பிட்டு உமது தெரிவுக்கான நியாயத்தையும் குறிப்பிடுக

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

(06 புள்ளிகள்)

(iv) உங்களால் கூறப்பட்டுள்ள ஆய்விற்கான பிரதான நோக்கமொன்றையும், மூன்று (03) குறிக்கோள்களையும் SMARTஅடிப்படையில் எழுதுக.

நோக்கம்.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

குறிக்கோள்

(அ).......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

(ஆ).......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

(இ).......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

(12 புள்ளிகள்)

(v) குறித்த ஆய்விற்கான பொருத்தமான மாதிரி வடிவத்தை விதந்துரைத்து, அதனை சுருக்கமாக விபரிப்பதுடன் பொருத்தமான தரவுசேகரிப்பிற்காக முறையியலை நியாயத்துடன் குறிப்பிடுக?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

(08 புள்ளிகள்)

02. (i) அளவைநிலை ஆய்வு வடிவத்தை தனியாள்(சம்பவகற்கை) ஆய்வு வடிவத்தில் இருந்து வேறுபடுத்திக் காட்டுக? (04 புள்ளிகள்)

(ii) செயல்நிலை ஆய்வு வடிவத்தின் பிரதான படிகளை எடுத்துக்காட்டுவதுடன் ஒவ்வாரு படியினையும் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக? (06 புள்ளிகள்)

(iii) செயல்நிலை ஆய்வு ஆசிரியர்களுக்கு பயனளிக்கும் தன்மையை அனுபவ சான்றுகளுடன் ஆராய்க? (06 புள்ளிகள்)

(iv) கல்வியியல் ஆய்வுகளில் பரிசோதனைசார் ஆய்வு வடிவத்தைப் பிரயோகிக்கும் போது எதிர்கொள்ளும் சிரமங்கள் மூன்றைக் (03) குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

03. (i) நிகழ்தகவற்ற மாதிரியெடுப்பு, நிகழ்தகவு மாதிரியெடுப்பு என்பன ஆய்வின் இரு பிரதான மாதிரியெடுப்பு முறைகளாகும். இவ்விரண்டு மாதிரியெடுப்புக்களையும் விளக்குக? (04 புள்ளிகள்)

(ii) மாதிரியெடுப்பின் நோக்கங்களையும், ஆய்வொன்றை மேற்கொள்வதற்காக மாதிரியெடுப்பினை பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் இரண்டு ஆய்வு வடிவங்களுடன் தொடர்புபடுத்தி ஆராய்க? (08 புள்ளிகள்)

(iv) கல்விசார் ஆய்வுகளில் படையாக்க மாதிரியெடுப்பு மற்றும் வசதி மாதிரியெடுப்பு முறை என்பன அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. ஆய்வுகளில் படையாக்க மாதிரியெடுப்பு மற்றும் வசதி மாதிரியெடுப்பு முறைகளின் பயன்பாட்டைப் பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக? (08 புள்ளிகள்)

04. (i) தொகைசார் மற்றும் பண்புநிலை ஆய்வு அணுகுமுறைகளின் பிரதான பண்புகளை(மூன்று பண்புகளையாவது பயன்படுத்தி) ஒப்பிடுக? (04 புள்ளிகள்)

(ii) அ. மேற்கண்ட ஒவ்வொரு அணுகுமுறைக்குமான பொருத்தமான இரண்டு (02) தரவு சேகரிப்புக் கருவிகளைப் பெயரிட்டு அவை ஒவ்வொன்றினதும் விசேட பண்புகளையும் விளக்குக?

ஆ. ஒவ்வொரு தரவு சேகரிப்பு கருவிகளுக்கும் அமைவாக ஆய்வாளரின் ஈடுபாட்டை பரிசீலனை செய்க? ( 10 புள்ளிகள்)

(iii) தரவு சேகரிப்பிறகு முன்னர் தரவு சேகரிப்புக் கருவிகளின் தகுதியுடைமையை சோதிப்பது மிக முக்கியமாகும். தரவு சேகரிப்பு கருவியினை தகுதியுடைமை பார்ப்பதன் முக்கியத்துவத்தை ஆராய்வதுடன் உமது ஆய்விற்கான தரவு சேகரிப்புக் கருவியின் தகுதியுடைமையை சோதிப்பதற்கு பின்பற்றும் படிகளையும் விளக்குக? (06 புள்ளிகள்)

05. (i) கல்விசார் ஆய்வொன்றை மேற்கொள்ளும் போதுள்ள பல்வேறு படிகளை உதாரணங்களுடன் எடுத்துக்ககாட்டுக? (04 புள்ளிகள்)

(ii) ஆய்வினை வாசிப்பவர்களுக்கு ஆய்வுத் தலைப்பின் முகக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் ஆய்வுப் பிரச்சினைக்கூற்று காணப்படல் வேண்டும். ஓர் ஆய்வுப் பிரச்சினைக் கூற்றினை உருவாக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகளை விளக்குக? (08 புள்ளிகள்)

(iii) இலக்கிய மீளாய்வானது ஆய்வாளர்களுக்கு ஆய்வுப் பிரச்சினைகளையும் அவர்களது ஆய்வுகளுக்கான முறையியலையும் இனங்காண்பதற்கு எவ்வாறு உதவுகிறது என்பதனை ஆராய்க. உமது விடையினை நியாயிக்கப் பொருத்தமான உதாரணங்களையும் தருக? (08 புள்ளிகள்)

06. (i) சிறந்த ஆய்வு அறிக்கையொன்றில் உள்ளடக்க வேண்டிய கூறுகள் யாவை? உதாரணங்களுடன் விளக்குக? (06 புள்ளிகள்)

(ii) ஆய்வொன்றினை எழுதும் போது ஆய்வாளர்கள் உரை மேற்கோள் (Text Citation) மற்றும் உசாத்துணை (Reference) என்பற்றைப் பயன்படுத்துவர். இவற்றை உதாரணங்களுடன் வேறுபடுத்திக் காட்டுக? (06 புள்ளிகள்)

(iii) ஆய்வறிக்கையினை எழுதும் போது பின்பற்ற வேண்டிய ஆய்வு ஒழுக்கங்கள் யாவை? விளக்குக. (08 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*